**முதலாவது கூடுதல் மாவட்ட நீதிமன்றம், நாமக்கல்**

**முன்னிலை:- திரு எஸ்.பிரபா சந்திரன், B.L.,**

**முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி, நாமக்கல்**

**2025 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 9 ம் நாள் செவ்வாய்க்கிழமை**

**(திருவள்ளுவராண்டு 2057, விசுவாவசு வருடம் ஆவணி மாதம் 24 ம் தேதி)**

**<u>I.A.No.9/2025 in O.S.No.181/2021</u>**

**(CNR No. TNNM01-002388-2021)**

1. இமயவர்மன்
2. மைனர்.பரந்தாமன்
பை அடுத்த சிநேகிதர் தாய்வழி
தாத்தா சச்சிதானந்தம் ..... மனுதாரர்கள்/வாதிகள்

-எதிராக-

1. ரமேஷ் (எ) ரமேஷ்காந்த்
2. செல்வராஜ்
3. கமலம்
4. தமிழ்நாடு மின்சார வாரியம்
பை அதன் சேர்மேன், சென்னை
5. செயற்பொறியாளர்(இயக்கமும் பராமரிப்பும்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம், நாமக்கல்)
6. உதவி செயற்பொறியாளர்,(இயக்கமும், பராமரிப்பும்
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம், எருமப்பட்டி)
7. உதவி செயற்பொறியாளர்(இயக்கமும், பராமரிப்பும்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம், வரகூர்)
.....எதிர்மனுதாரர்கள்/
பிரிதிவாதிகள்

இம்மனு இந்நீதிமன்றம் முன்பாக இறுதி விசாரணைக்கு 09.09.2025 ம் தேதியான இன்று கொண்டுவரப்பட்டு மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.P.குமரேசன் அவர்களும், 1 ம் எதிர்மனுதாரர் தரப்பில் அழைத்தும் ஆஜரில்லாததால் 1 ம் எதிர்மனுதாரரைப் பொறுத்து தோன்றாத்தரப்பினராக்கப்பட்டும், 2,3 எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.K.பழனிசாமி அவர்களும் ஆஜராகியும், 4 முதல் 7 எதிர்மனுதாரர்கள் தரப்பில் அரசு வழக்கறிஞர் திரு.V.K.அறிவழகன் அவர்கள் ஆஜராகியும், 4 முதல் 7 எதிர்மனுதாரர்கள் தரப்பில் எதிர்உரை இல்லை என மேலொப்பம் செய்யப்பட்டும்,

இருதரப்பு வாதம் கேட்கப்பட்டும் ஆவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்படும்...

//உத்திரவு//

இம்மனுவானது, மனுவில் கண்டுள்ளவாறு தாவா பிராதை திருத்தம் செய்துக்கொள்ள அனுமதியளிக்க வேண்டி கட்டளை 6 விதி 17 சி.பி.சி–ன்படி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2) மனுவின் சுருக்கம்–**

1ம் மனுதாரர் அசல் தாவாவில் 1ம் வாதி ஆவார். மைனர் 2ம் வாதி மனுதாரருடைய சகோதரர் ஆவார். மேற்படியாருக்காகவும் மனுதாரர் பிரமாணப்பத்திரிக்கையை தாக்கல் செய்துள்ளார். தாவா சொத்துக்களை பொறுத்து மனுதாரரும் அவருடைய சகோதரரும், இந்த வழக்கின் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் மீது நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள். மேலும் தாவா சொத்துக்களை பொறுத்து 1 முதல் 3 பிரதிவாதிகள் பெயரில் பாகப்பிரிவினை மற்றும் தனிசுவாதீனத்திற்கும் O.S.No.241/2019 நெம்பரில் தாவா தாக்கல் செய்துள்ளார்கள். மேற்படி இரண்டு வழக்குகளும் ஒன்றாக விசாரணை மேற்கொள்ளப்பட்டதில் O.S.No.241/2019 நெம்பர் வழக்கில் ஆவணங்கள் தாக்கல் செய்து சாட்சிகள் விசாரணை நடைபெற்று வருகிறது. 1ம் எதிர்மனுதாரர், மனுதாரர்களுடைய தகப்பனார். 2,3 எதிர்மனுதாரர்கள் தாவா சொத்துக்களை மனுதாரருடைய தகப்பனாரிடமிருந்து கிரையம் பெற்ற நபர்கள் ஆவார்கள்.தாவா சொத்துக்கள் மனுதாரர்களுடைய தகப்பனாருக்கு பூர்வீகமாய் பாத்தியப்பட்ட சொத்துக்களாகும். தாவா சொத்துக்களை மனுதாரர்கள் கூட்டாக அனுபவம் செய்து வந்ததில் தாவா சொத்துக்களில் மனுதாரர்களுக்குண்டான 3ல் 2 பங்கினை உட்படுத்தி 1ம் எதிர்மனுதாரரான மனுதாரர்களுடைய தகப்பனார் கடந்த 04.05.2018 தேதியில் 2,3 எதிர்மனுதாரர்களுக்கு கிரையம் செய்து கொடுத்துவிட்டார்.

மேற்படி கிரைய ஆவணத்தில் மனுதாரர்கள் தரப்பினர்கள் அல்ல. மேற்படி கிரைய ஆவணம் மனுதாரர்களுக்குண்டான 3ல் 2 பங்கினை பொறுத்து கட்டுப்படுத்தாது. OS.No.241/2019 நெம்பர் தாவாவில் 2,3 பிரதிவாதிகள் தரப்பில் மேற்படியார்களின் மகன் DW1 ஆக முதல் விசாரணை வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளார். மேற்படியாரை குறுக்கு விசாரணை செய்த சமயத்தில் தான் மனுதாரருடைய தகப்பனார் 2,3 பிரதிவாதிகளுக்கு கடந்த 04.05.2018 தேதியில் ஏற்படுத்திய கிரைய ஆவணத்தில் 2வது அயிட்டமாக காண்பிக்கப்பட்டுள்ள சொத்தினை தாவா சொத்து விபரத்தில் குறிப்பிடப்படாமல் விடுபட்டு போன விபரம் தெரிய வந்தது. மேற்படி தவறு வேண்டுமென்றே ஏற்பட்டதல்ல. போனபைடாக ஏற்பட்டதாகும். மேற்படி கிரைய ஆவணத்தில் கண்டுள்ள 2வது அயிட்ட சொத்தினை தாவா சொத்து விபரத்தில் சேர்ப்பதால் எதிர்மனுதாரர்களுக்கு எவ்வித பாதிப்பும், இன்னலும் ஏற்படாது. மேற்படி சொத்தினை சேர்க்காத பட்சத்தில் எங்களுக்கு பெருத்த பாதிப்பும் கஷ்ட, நஷ்டமும் ஏற்படும். அதனால் மனு திருத்தல் விபரத்தில் கண்டுள்ளவாறு தாவா பிராதுவை திருத்தம் செய்து கொள்ள அனுமதி அளித்து உத்திரவு பிறப்பிக்க வேண்டுமென சொல்லப்பட்டுள்ளது.

3) இ.ம.எண்.8/2025 இன் அ.வ.எண்.241/2019 ல் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்உரையை இம்மனுவின் எதிர்உரையாக பாவிக்க கோரி குறிப்பாணை தாக்கல் செய்யப்பட்டு குறிப்பாணை பதிவு செய்யப்பட்டுள்ளது. 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிர்உரையின் சுருக்கம்–

மனுதாரரின் மனு சுத்தப்பொய்யும் மோசடியுமானதாகும். சட்டப்படிக்கும் நியாயப்படிக்கும் நிலைக்கத்தக்கதல்ல. உண்மையாதெனில், மேற்படி மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள அபிடவிட்டில் ஏதோ DWI–யை குறுக்கு விசாரணை செய்யும் பொழுதுதான் ச.எண்:88/1B1A என்ற சர்வே எண் சேர்க்கப்படாமல் விடுபட்டுவிட்டது என மனுவில் கூறியுள்ள சங்கதிகள் யாவும் சுத்தப்பொய்,

மேற்படி தாவாவில் இந்த எதிர்மனுதாரரால் கடந்த 13.03.2024 தேதியில் தாக்கல் செய்துள்ள கூடுதல் பதிலுரையிலேயே மேற்படி சில சொத்துகள் விடுபட்டுள்ளன என்பது குறித்து தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் மேற்படி PW1–யை குறுக்கு விசாரணை செய்யும் சமயத்திலும் மேற்படி Partial Partition குறித்து கேள்வி கேட்கப்பட்டுள்ளது. அதன் பின்னிட்டு மேற்படி சங்கதிகள் குறித்து DW1 பிரமாண வாக்குமூலத்திலும் குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி நிலையில் இந்த மனுதாரர்கள் தரப்பில் எவ்வித நடவடிக்கையும் எடுக்காமல் தற்பொழுது பொய்யான சங்கதிகளை கூறி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேலும் மேற்படி அசல் வழக்கில் PW1, PW2 மற்றும் DW1 என சாட்சிகள் விசாரிக்கப்பட்ட பின்பு தற்பொழுது இந்த வழக்கை நடத்தாமல் இழுத்தடிக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் தற்பொழுது இந்த மனுதாரர்களால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேலும் மேற்படி மனுவானது இந்த எதிர்மனுதாரர்களுக்கு வீண் இடைஞ்சல் மற்றும் பெருத்த பொருளாதார நஷ்டம் கொடுக்க வேண்டும் என்ற ஒரே நோக்கத்தில் இந்த மனுதாரர்களால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேலும் மேற்படி மனுவில் திருத்தல் விபரத்தில் காட்டப்பட்டுள்ள சர்வே எண்: 88/1B1A என்ற சொத்தின் மதிப்பு குறித்தோ அதில் உள்ள கட்டிடத்தின் மதிப்பு குறித்தோ எதுவும் குறிப்பிடப்படவில்லை. மேலும் மேற்படி தாவா சொத்தின் மதிப்பு குறித்து பிராதில் கூறியுள்ள தாவா மொத்தம் என குறிப்பிட்டுள்ள பகுதியில் திருத்தம் செய்ய வேண்டிய விபரங்கள் குறித்தும் குறிப்பிடாமல் தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த மனு சட்டப்படிக்கும் நியாயப்படிக்கும் ஏற்கக்கூடியதல்ல. மேற்படி மனு எடுத்த எடுப்பிலேயே தள்ளுபடி ஆகத்தக்கது. மேலும் மேற்படி கட்டிடத்தில் உள்ள மின் இணைப்புகள் குறித்தும் குறிப்பிடாமல் தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த மனு சட்டப்படிக்கும் நியாயப்படிக்கும் நிலைக்கத்தக்கதல்ல. மேலும் இந்த அசல் தாவாவுடன் சேர்த்து அ.வ.எண்:181/2021 என்ற தாவா சமூகம் நீதிமன்றத்தில் நடைப்பெற்று வருகிறது. மேற்படி தாவாவில் தாக்கல் செய்யப்பட்டுள்ள திருத்தல் மனுவும் மேற்படி காரணங்களால் சட்டப்படிக்கும் நியாயப்படிக்கும் நிலைக்கத்தக்கதல்ல. எடுத்த எடுப்பிலேயே தள்ளுபடி ஆகத்தக்க ஒன்றாகும். மேலும் மேற்படி தாவா சொத்தை இந்த எதிர்மனுதாரர் மற்றும் 3ம்

எதிர்மனுதாரருக்கு கிரையம் மூலம் பாத்தியப்பட்ட சுயராஜ்ஜித சொத்தாகும். மேற்படி தாவா சொத்தில் இந்த எதிர்மனுதாரரை தவிர வேறு யாருக்கும் எவ்வித உரிமையோ பாத்தியமோ அனுபவமோ கிடையாது. மேற்படி மனுவின் மனுதாரர்கள் இந்த மனுவின் 1ம் எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ்ந்துக்கொண்டு மேற்படி 1ம் எதிர்மனுதாரரின் தூண்டுதலின் பெயரில் தாவா தாக்கல் செய்ததுடன் தற்பொழுது இந்த மனுவையும் தாக்கல் செய்துள்ளனர். மேற்படி நிலையில் மேற்படி மனு சட்டப்படிக்கும் நியாயப்படிக்கும் நிலைக்கத்தக்கதல்ல. எடுத்த எடுப்பிலேயே தள்ளுபடியாகத்தக்கதாகும். மேலும் உண்மையில் மனு அனுமதிக்கப்படும்பட்சத்தில் இந்த எதிர்மனுதாரருக்கு ஈடு செய்ய முடியாத இழப்பும் பெருத்த கஷ்டமும் நஷ்டமும் ஏற்பட்டுவிடும். மனுதாரர்களின் இம்மனுவினை இந்த எதிர்மனுதாரரின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்து உத்திரவிட வேண்டுமென சொல்லப்பட்டுள்ளது.

4) மனுதாரர், எதிர்மனுதாரர் தரப்பில் சாட்சிகள், சான்றாவணங்கள் இல்லை.

5) <u>மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா என்பதை தீர்மானம் செய்ய வேண்டியுள்ளது.</u>

<u>தீர்வு–</u>

6) மனுதாரர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் வாதுரையின்போது, தாவா சொத்துக்களை பொறுத்து இந்த மனுதாரர்கள்/வாதிகள் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளனர். மேலும் தாவா சொத்துக்களை பொறுத்து இந்த மனுதாரர்கள் பாகப்பிரிவினை பரிகாரம் கோரி அ.வ.எண்.241/2019 என்கிற வழக்கை தாக்கல் செய்துள்ளனர். மேற்படி இருவழக்குகளும் ஒன்றாக விசாரணை செய்யப்பட்டு அ.வ.எண்.241/2019 வழக்கில் சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டு சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. இந்த மனுதாரர்களின் தகப்பனாரான 1ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதி, பூர்வீக சொத்துக்களை பொறுத்து 2,3 எதிர்மனுதாரர்களுக்கு கடந்த 4.5.2018 ல் கிரையம் செய்துக்கொடுத்துள்ளார். மேற்படி கிரையமானது இந்த மனுதாரர்களின் பாகத்தை கட்டுப்படுத்தாது. 2,3 பிரதிவாதிகள் தரப்பில் விசாரணை செய்யப்பட்ட பி.சா.1 ஐ

குறுக்கு விசாரணை செய்த போதுதான் 4.5.2018 தேதியிட்ட கிரைய ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 2 வது இன சொத்தானது இந்த வழக்கில் சேர்க்கப்படவில்லை என்கிற விவரம் தெரிய வந்தது. ஆகவே 4.5.2018 தேதியிட்ட கிரைய ஆவணத்தை ஆட்சேபித்து மனுதாரர்கள் அசல் வழக்கை தாக்கல் செய்துள்ளதால் அந்த கிரைய ஆவணத்தில் கண்டுள்ள சொத்துக்கள் அனைத்தும் இந்த வழக்கில் சேர்க்கப்பட வேண்டியது அவசியமானதாகும். அப்படியிருக்க மேற்படி சொத்து தெய்வாதீனமாக அசல் வழக்கில் சேர்க்க விடுபட்டுள்ளது. மேற்படி தவறு வேண்டுமென்றே ஏற்பட்டதல்ல. இம்மனு அனுமதிக்கப்படுவதால் எதிர்மனுதாரர்களின் வழக்கிற்கு யாதொரு பாதிப்பும் ஏற்பட வாய்ப்பில்லை. ஆகவே இம்மனுவை அனுமதிக்க வேண்டுமென வாதிட்டார்.

7) 2,3 எதிர்மனுதாரர்கள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் வாதுரையின்போது, இந்த எதிர்மனுதாரர்கள் தரப்பில் 13.3.2024 ல் தாக்கல் செய்த எதிர்வழக்குரையிலேயே சில சொத்துக்கள் விடுபட்டுள்ளது என குறிப்பிடப்பட்டுள்ளது. வா.சா.1 ஐ குறுக்கு விசாரணை செய்யும் சமயத்திலும், Partial Partition குறித்து கேள்வி கேட்கப்பட்டுள்ளது. ஆகவே இம்மனு காலம் கடந்து தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இம்மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்தின் மதிப்பு குறித்தோ அதில் உள்ள கட்டிடம் குறித்தோ குறிப்பிடப்படவில்லை. இம்மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்தில் மனுதாரர்களுக்கு யாதொரு பாத்தியமும் அனுபவமும் இல்லை. ஆகவே அசல் வழக்கை காலதாமதப்படுத்த வேண்டுமென்கிற நோக்கத்தோடு இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் இம்மனுவை தள்ளுபடி செய்ய வேண்டுமென வாதிட்டார்.

8) அ.வ.எண். 181/2021 வழக்கானது தாவா சொத்தில் உள்ள மின் இணைப்புகளை 2 முதல் 7 பிரதிவாதிகள் துண்டிக்காமல் இருக்கவும், தாவா சொத்தில் உள்ள மின் இணைப்பை 2, 3 பிரதிவாதிகள் பெயரில் 4 முதல் 7 பிரதிவாதிகள் பெயர் மாற்றம் செய்யாமல் இருக்கவும், நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி சொத்து விவரத்தில்

ச.எண்.93/2 பி–ல் உள்ள ஆர்.சி.சி கட்டிடங்களும், மின் இணைப்புகளும் குறிப்பிடப்பட்டுள்ளது. தாவா சொத்துக்கள் வாதிகள் மற்றும் 1ம் பிரதிவாதிக்கு பாத்தியமான பூர்வீக சொத்துக்கள் என்றும், அதனை பொறுத்து 4.5.2018 அன்று 1ம் பிரதிவாதி ஏற்படுத்தியுள்ள கிரைய ஆவணம் வாதிகளின் 2/3 பாகத்தை கட்டுப்படுத்தாது என்றும், அதனை பொறுத்து நாமக்கல் முதன்மை மாவட்ட நீதிமன்றத்தில் அ.வ.எண்.241/2019 என்கிற பாகப்பிரிவினை வழக்கை தாக்கல் செய்துள்ளதாகவும் பிராதில் சொல்லப்பட்டுள்ளது. ஆகவே 4.5.2018 தேதியிட்ட கிரைய ஆவணத்தில் கண்டுள்ள மின் இணைப்புகளை பொறுத்து இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக பிராதில் சொல்லப்பட்டுள்ளது. 4.5.2018 தேதியிட்ட கிரைய ஆவணத்தின் கணிணி பதிவிறக்க நகல் அசல் வழக்கில் வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி ஆவணத்தை காண்கின்றபோது இந்த திருத்தல் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்தானது 2வது அயிட்ட சொத்தாக மேற்படி கிரைய ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்பது தெரிய வருகிறது. ஆகவே 4.5.2018 தேதியிட்ட கிரைய ஆவணத்தில் கண்டுள்ள சொத்துக்களில் உள்ள மின் இணைப்புகளை பொறுத்து அசல் வழக்கில் பரிகாரங்கள் கேட்கப்பட்டுள்ளதால் 4.5.2018 கிரைய ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 2வது இன சொத்தானது இம்மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்தையும் அசல் வழக்கில் சேர்க்க வேண்டுமென மனுதாரர் தரப்பில் கூறுவது ஏற்கத்தக்கதாகவே உள்ளது. அசல் வழக்கானது 4.5.2018 தேதியிட்ட கிரைய ஆவணத்தில் உள்ள சொத்துக்களில் மனுதாரர்களுக்குரிய பாகத்தை ஆட்சேபித்து அதில் உள்ள மின் இணைப்புகளை பொறுத்து பரிகாரம் கேட்கப்பட்டுள்ளது. அப்படியிருக்க மேற்படி கிரைய ஆவணத்தில் கண்டுள்ள 2வது இன சொத்தை இந்த வழக்கில் சேர்க்க அனுமதிப்பதால் அசல் வழக்கின் தன்மையிலோ, வழக்குமூலத்திலோ யாதொரு மாற்றமும் ஏற்பட வாய்ப்பில்லை என்பதாலும், அவ்வாறு அனுமதிப்பதால் புதிய வழக்கை உட்புகுத்தும் வகையில் மேற்படி திருத்தம் அமையாது என்பதாலும், இந்நீதிமன்றம் விசாரணை நீதிமன்றம் என்பதால் இருதரப்பினர்களுக்கும் அவர்களது தரப்பு வழக்கை எடுத்துரைக்க முழுமையான வாய்ப்பளிக்க வேண்டியது அவசியமும், நியாயமுமானது என இந்நீதிமன்றம் கருதுவதாலும், நீதியின் நலன்

கருதியும் மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள இம்மனுவானது, மனுதாரர்கள், 2,3 எதிர்மனுதாரர்களுக்கு ரூ.2,000/-த்தை 15.09.2025 க்குள் செலுத்தும் பட்சத்தில் இம்மனு அனுமதிக்கப்படும் என்றும், தவறினால் இம்மனு தாமாகவே தள்ளுபடியாகிவிடும் என்றும் உத்திரவிடப்படுகிறது.

9) முடிவாக, மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள இம்மனுவானது, மனுதாரர்கள், 2,3 எதிர்மனுதாரர்களுக்கு ரூ.2,000/-த்தை 15.09.2025 க்குள் செலுத்தும் பட்சத்தில் இம்மனு அனுமதிக்கப்படும் என்றும், தவறினால் இம்மனு தாமாகவே தள்ளுபடியாகிவிடும் என்றும் உத்திரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தாளருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிணியில் உடனுக்குடன் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்ட பின்னர் 2025 ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 9 ம் நாளான இன்று அவையறிய பகரப்படுகிறது.

sd/-S.Prabha Chandran

முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
நாமக்கல்.

**<u>மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்- இல்லை</u>.**
**<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்- இல்லை.</u>**

sd/-S.Prabha Chandran
முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
நாமக்கல்.